பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 08 2024 **THURSDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திரமோடி மற்றும் வியட்நாம் பிரதமர் திரு. **Pham Minh chinh** இடையே புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

2. ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

3. கேரள மாநிலம், வயநாட்டு நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 250ஆக அதிகரித்துள்ளது. அங்கு மீட்புப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

4. ஹிமச்சலப்பிரதேசத்தில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உறுதியளித்துள்ளார்.

5. உத்ராகண்டில் பெருமழை காரணமாக பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டதை அடுத்து, பாதுகாப்பு படைகள் அங்கு விரைந்துள்ளன.

**>>>>><<<<<**

பிரதமர் திரு நரேந்திரமோடி மற்றும் வியட்நாம் பிரதமர் திரு. **Pham Minh chinh** இடையே புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

முன்னதாக, மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ள வியட்நாம் பிரதமருக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று காலை பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவரை வரவேற்றார்.

இதையடுத்து, ராஜ்கட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் வியட்நாம் பிரதமர் மரியாதை செலுத்தினார்.

இன்று மாலை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மற்றும் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கரை, வியட்நாம் பிரதமர் திரு. **Pham Minh chinh** சந்தித்து பேசுகிறார்.

**>>>>><<<<<**

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 250-ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அதிகம் பாதிக்கப்பட்ட சூரல்மலா, முண்டக்கை ஆகிய இடங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக ராணுவம் தற்காலிக பாலங்களை அமைத்து வருகிறது.

இந்தப் பணி சில இடங்களில் முடிவடைந்துள்ள நிலையில், மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளுக்கும், நிவாரண முகாம்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

ஏராளமான வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானப்படையும், தேசிய பேரிடர் மீட்பு படையினரும் இணைந்து மேற்கொண்டு வரும் நிவாரண பணிகள் மூலம் இதுவரை 53 மெட்ரிக் டன் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் இதர பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

நிலச்சரிவில் சிக்கிய 200க்கும் மேற்பட்டோர் விமானங்கள் மூலம் பாதுகாப்பாக மீட்கப்பட்டிருப்பதாகவும், **MI-17** மற்றும் துருவ் ரக அதிநவீன ஹெலிகாப்டர்கள் மூலம் மக்கள் மீட்கப்படுவதாகவும், நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர்களின் உடல்நிலையை கண்காணிப்பதற்கு தற்காலிக மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் சடலங்களை அடையாளம் காண்பதற்கு வசதியாக மாதிரி ரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், நாட்டின் பல பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் மேகவெடிப்பு காரணமாக பெய்த கனமழையால் மூன்று இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

சிம்லாவில் ராம்பூர் பகுதியில் உள்ள நீர்மின் நிலைய பகுதிக்கு உட்பட்ட இடங்களில் 19 பேர் காணாமல் போயிருப்பதாகவும், அவர்களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிம்லாவின் துணை ஆணையர் திரு. அனுபம் கஷ்யப் தெரிவித்துள்ளார்.

பாதிப்புகளில் சிக்கியவர்களை மீட்பதற்காக மாநில பேரிடர் மீட்புப் படையினர், காவல்துறை மற்றும் சிறப்பு காவல்படையினர் அந்தப் பகுதிகளுக்கு விரைந்து சென்றிருப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஹிமாச்சலப்பிரதேச முதலமைச்சர் திரு. சுக்வீந்தர் சிங் சுகு-விடம் தொலைபேசி மூலம் அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக இருப்பதாகவும், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மூலம் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

உத்ராகண்ட் மாநிலத்தின் தேரி மாவட்டத்தில் பிலாங்கானா பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 3 பேர் உயிரிழந்திருப்பதாகவும், ஹரித்துவாரில் பெருமழை காரணமாக வீடு இடிந்து விழுந்த சம்பவத்தில் 2 குழந்தைகள் உயிரிழந்திருப்பதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கேதார்நாத் பகுதியில் சிக்கியுள்ள 200 யாத்திரிகர்களை பாதுகாப்பாக மீட்டு, தற்காலிக முகாம்களுக்கு மீட்புப் படையினர் அழைத்துச் சென்றுள்ளனர்.

ஹரித்வார் மற்றும் ரிஷிகேஷில் சர்தம் யாத்திரை தொடர்பான யாத்திரிகர்கள் முன்பதிவு பணி, நிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கனமழை தொடர்ந்துவரும் நிலையில், அம்மாநிலத்தில் உள்ள முக்கிய நதிகளில் அபாய அளவிற்கும் அதிகமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

தலைநகர் தில்லியில் கனமழை பெய்த பகுதிகளில் வெள்ளம் சூழந்துள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு அங்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் ஏற்பட்ட பகுதி ஒன்றில் மின்கம்பி அறுந்து விழுந்து மின்சாரம் தாக்கியதில் 3 பேர் உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

மகாராஷ்ட்ரா மாநிலத்திலும் அடுத்த நான்கு நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மும்பை, தானே. புனே, ராய்கட், ரத்னகிரி உள்ளிட்ட 9 இடங்களில் பலத்த மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும் என்று உச்சநீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமையிலான ஏழு நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு இதற்கான உத்தரவை இன்று பிறப்பித்தது.

ஏற்கனவே இதுதொடர்பான வழக்குகளை சுட்டிக்காட்டிய, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, அரசியலமைப்பு சட்டத்தின் 14, 15 மற்றும் 16வது பிரிவின்படி மாநில அரசுகள் உள்ஒதுக்கீட்டை முடிவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த பாரதம் எனும் நோக்கோடு மத்திய அரசு அனைத்து மக்களும் பயன்பெறும் வகையிலான திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 14 லட்சம் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஜன்தன் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் 59 சதவீத பெண்கள் வங்கிக்கணக்கு தொடங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று முழக்கமிட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அவரது கருத்துக்கள் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்கான வழிகாட்டுதலை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

ராமேஸ்வரம் அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகு மீது இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மோதி படகு கவிழ்ந்த சம்பவத்தில், நான்கு மீனவர்கள் காணாமல் போனதாக தமிழக மீன்வளத்துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன மீனவர்களையும், படகையும் கண்டுபிடித்து தருமாறு அந்த புகாரில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில் உள்ள கிட்டங்கியில் மாநில கூட்டுறவுத்துறை முதன்மைச் செயலாளர் திரு. ராதாகிருஷ்ணன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டுறவுத்துறை மூலமாக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு அதிக அளவில் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட — ராதாகிருஷ்ணன் 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், சொந்த மாவட்டங்களில் பணியாற்றும் அதிகாரிகளையும், மூன்றாண்டுகளுக்கும் மேலாக ஒரே மாவட்டத்தில் பணிபுரிபவர்களையும் இடமாற்றம் செய்யுமாறு ஜம்மு காஷ்மீர் நிர்வாகத்திற்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையம், ஜம்மு கஷ்மீர் தலைமைச் செயலாளர் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதனை தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அடுத்த மாதம் 20ஆம் தேதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வரும் செப்டம்பர் மாதத்திற்குள் ஜம்மு காஷ்மீரில் சட்டப்பேரவை தேர்தல் நடத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

லெபனான் நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

அந்நாட்டில் நிலவிவரும் அசாதரண சூழல் காரணமாக அங்குள்ள இந்தியர்கள் தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தேவையின்றி, அந்நாட்டிற்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தைவான் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-1 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Derek Pham** –ஐ வென்றார்.

>>>>><<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Srivalli Reshmika** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 7-5 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Fiona Crawley-**யை வென்றார்.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பல்வேறு பிரிவுகளில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

பேட்மிண்டன், கோல்ஃப், துப்பாக்கிச் சுடுதல், டேபிள் டென்னிஸ், குத்துச்சண்டை, வில்வித்தை, பாய்மரப்படகு மற்றும் தடகள போட்டிகளில் இந்திய வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<